களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# Tiruvaḷḷuvar kāviyam kāṭṭum akimcaineṟi

**Dr. V. Vignesh,**

*Assistant Professor of Tamil, P.S.G. College of Arts and Science, Coimbatore - 641014.*

vignesh@psgcas.ac.in *Mob: 9597203214*

## A B S T R A C T

Tiruvaḷḷuvar kāviyam is a unique Tamil poem of the twentieth century. It was composed by Coimbatore scholar A. Krishnasamy Naidu. The author's fictional kāviyam Thandiyalangaram also contains elements of kāviyam. The author has a deep commitment to Swarajya, democracy, Gandhi's non-violence, and Nehru's equality. Due to the author's boundless interest in Nehru's equality, he has created an egalitarian society without caste and religion in this kāviyam. Thus, due to his attachment to Gandhi, thoughts on non-violence are woven into this poem. This article was written to identify them.

## A R T I C L E I N F O

Received : 20 January 2025
Revised : 30 January 2025
Accepted : 01 February 2025
Online: 01 February 2025

**K E Y W O R D S**

Thiruvalluvar, poetry, non-violence, Gandhi, equality, திருவள்ளுவர், காப்பியம், அகிம்சை, காந்தி, சமதருமம்

# திருவள்ளுவர் காவியம் காட்டும் அகிம்சைநெறி

**டாக்டர். வே.விக்னேசு,**

தமிழ் உதவிப்பேராசிரியர், பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641014. vignesh@psgcas.ac.in 9597203214.

**ஆய்வுச்சுருக்கம் :**

இருபதாம் நூற்றாண்டு கண்ட தனித்தமிழ்க்காப்பியம் திருவள்ளுவர் காவியம். இதனை இயற்றியவர் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள். ஆசிரியரின் கற்பனைக்காவியமான இதன்கண் தண்டியலங்காரம் நவிலும் காப்பிய உறுப்புக்கள் பொருந்தியுள. சுயராஜ்யம், மக்களாட்சி, காந்தியின் அகிம்சை, நேருவின் சமதருமம்

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

ஆகியவற்றில் ஆசிரியருக்கு ஆழமான ஈடுபாடு உண்டு. நேருவின் சமதருமத்தில் ஆசிரியருக்கிருந்த அளவிலா ஆர்வத்தினால் சாதி, சமயமற்ற சமதருமச் சமுதாயத்தை இக்காவியத்தில் படைத்துக்காட்டியுள்ளார். அவ்வகையில் காந்தியண்ணலின் மீது இவர் கொண்டிருந்த பற்றுதலினால் அகிம்சை குறித்த சிந்தனைகள் இக்காவியத்தில் இழையோடுகின்றன. அவற்றை இனங்காட்டும் முகத்தான் எழுந்ததே இக்கட்டுரை.

**திறவுச் சொற்கள் :** திருவள்ளுவர், காப்பியம், அகிம்சை, காந்தி, சமதருமம்

**தோற்றுவாய் :**

அ.கி.நாயுடு என்று தனியன்போடும் பெருமதிப்போடும் தமிழ்கூறும் நல்லுலகால் அழைக்கப்பெறும் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு திருவள்ளுவர் காவியம் இயற்றியவர். தமிழர் சமுதாயம், எல்லாச் சமுதாய அமைப்புகளுக்கும் முன்னையது; தனிச்சிறப்புடையது என்பதைத் தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் என்னும் ஆராய்ச்சிப் பெருநூல் வழி நிறுவியவர். கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு, கம்மவாரும் தென்னாடும், நால்வகைப் பாவும் பாவைநோன்பு வரலாறும், திருபகவன் கீதை உண்மைப்பொருள், பூளைமேடு வரலாறு என்னும் நூல்களைப் படைத்தவர். இரதபந்தம் இயற்றுவதில் வல்லவர். உள்ளம் நினைப்பதை வெண்பாவால் வெளியிடும் ஆற்றல் பெற்றவர். இத்தகு சான்றோர் அரிதின்முயன்று இயற்றிய திருவள்ளுவர் காவியத்தில் வெளிப்படும் அகிம்சை குறித்த சிந்தனைகளை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திருவள்ளுவர் காவியம் :**

அல்லன மறுத்து நல்லன ஏற்றுத் தெளிந்த உண்மைகளை எழுதும் திறனும் உரனும் பெற்றிருந்த அ.கி. நாயுடு அவர்கள், 1940-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே ‘காப்பியம்’ இயற்ற வேண்டுமென்ற வேணவா இருந்து வந்தது. இவ் அவாவின் மேலீட்டால் உலகச் சான்றோர் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு அரும்பெருங் காப்பியமொன்று

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

இயற்றலானார். பதினெட்டாண்டுகள் அரும்பாடுபட்டு கப்பியத்தை இயற்றி முடித்து, 1958-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பீளமேட்டில் அரங்கேற்றினார். இங்ஙனம் அரிதின்முயன்று இயற்றிய காப்பியமே ‘திருவள்ளுவர் காவியம்’ என்னும் பெயரினதாம்.

**காவிய அமைப்பு :**

திருவள்ளுவரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட திருவள்ளுவர் காவியம் 5 காண்டங்களையும் 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும் கொண்டது. காவியத்தொடக்கத்தில் 23 பாயிரச் செய்யுட்களையும் கொண்டது. கல்விக்காண்டம் 12 படலங்களையும் 215 செய்யுட்களையும்; யாத்திரைக்காண்டம் 84 படலங்களையும் 751 செய்யுட்களையும்; முப்பால்காண்டம் 18 படலங்களையும் 518 செய்யுட்களையும்; உரிமைக்காண்டம் 26 படலங்களையும் 988 செய்யுட்களையும்; அமைதிக்காண்டம் 25 படலங்களையும் 1449 செய்யுட்களையும் கொண்டுள்ளன.

இக்காவியத்திலுள்ள பாக்களனைத்தும் வெண்பாக்களால் இயன்றதாகும். வேண்டுழியெல்லாம் திருக்குறளைப் பொருத்திக் காட்டுதற் பொருட்டே வெண்பாக்களான் இக்காவியம் இயற்றியதை,

**”பாவினத்தால் பாட்டியற்றும் பண்பிருந்தும் பாடரிய**
**தேவினித்த வெண்பாவில் செய்தனன் நூல் – காவியத்தில்**
**முப்பால் முழுக்குறளை அங்ஙனே வைத்தற்காம்**
**அப்பால் கருத்தமைதி ஆய்த்து”**

- (திருவள்ளுவர் காவியம். பாயிரம். பா.22)

என்னும் பாயிரச்செய்யுளான் இந்நூலாசிரியர் இயம்புகின்றார்.

**அகிம்சை :**

அகிம்சை என்பதற்குப் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் என்பது பொருளாகும். அகிம்சையைப் பல சமயங்களும் போற்றுகின்றன. எண்ணத்தாலும் செயலாலும்

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

கொல்லாமையை பௌத்தம் வற்புறுத்துகின்றது. சமண சமயத்தின் சிறந்த நோன்புகளிலொன்று அகிம்சை. பகைவனையும் நண்பனாக்கிக் கொள்ளுமாறு பார்சி சமயம் கூறுகிறது.

சமயங்களைப் போன்றே தமிழிலக்கியங்களும் அகிம்சையை வலியுறுத்துகின்றன. 'பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாமை தவம்' என்றும் (குறள்:261) 'துன்பம் செய்தாரை ஒறுத்தல் அவர் வெட்கப்படும்படியாக நன்மை செய்வதாகும்' என்றும் (குறள்:314) வள்ளுவம் அகிம்சையை வலியுறுத்தும். 'பிறர்க்குத் துன்பம் செய்யாமை சிறப்பு' என்கிறது சிறுபஞ்சமூலம் (சிறுபஞ்சமூலம்:37). 'பகைவனுக்குக்கருள்வாய் நன்னெஞ்சே' (பாரதியார் கவிதைகள், ஞானப்பாடல்கள், 23) என்பர் பாரதியார்.

இங்ஙனமே, காந்தியடிகள் அகிம்சைக்குப் பலபொருள்களைக் காண்கின்றார். காந்தியடிகள் பகைமையை அன்பால் வெல்லும் வழியைத் தெளிவாகக் காட்டுகின்றார். அவ்வழி பகைமையின் தீயசக்திக்குப் பணியாமல் தீமையை ஆன்ம பலத்தால் எதிர்ப்பதும் அதன்வழி அவர்களை நன்னெறியில் நிறுத்துவதுமாகும். தீமை செய்வார்க்குச் செய்யும் நன்மை அவரை அறநெறியில் நிறுத்துவதேயாகும் என்பது காந்தியடிகள் கூறும் விளக்கமாகும் என்பர் (பொ.திரிகூடசுந்தரம்; 1966:ப.30)

அகிம்சைக்கு வெளியாரிடம் அல்லது வெளிப்படையான பயிற்சி பெறுவது அவசியம் இல்லை. பதில் நடவடிக்கையாகக் கூட யாரையும் கொல்லுவதில்லை என்ற மனஉறுதியும் பழிவாங்கும் எண்ணமின்றிச் சாவை எதிர்நோக்கும் திறமும் தான் அதற்குத் தேவை என்பது காந்தியடிகளின் கருத்து (ஸ்ரீ.யு.எஸ். மோ உறன்ராவ்: 1970; ப. 50). தவிர, அன்பு இருக்கும் இடத்தில் வாழ்வு இருக்கும்; துவேஷம் அழிவில் கொண்டுவிடும் என்றும் (மேலது; ப.51) கோபமோ, குரோதமோ இல்லாமல் துன்பத்தை ஒருவர் ஏற்றுக்கொள்வது உதயசூரியனுக்கு ஒப்பானது. அதன் முன்னிலையில் கல்நெஞ்சும் கரையும், கனத்த அறியாமையும் மறையும் என்றும் (மேலது;ப.61) காந்தியடிகள் அகிம்சையைப் பற்றிக் கூறுகிறார்.

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

பிறவுயிர்க்குக் கெடுதி விளைவிக்காதிருத்தல், பிறவுயிர் ஊறுசெய்தாலும் நாம் செய்யாமை, பிறவுயிர் நமக்குத் தீங்கு செய்தாலும். நாம் ஊறு செய்யாமல் அவர்களுடைய தீமையை உணரவைத்தல் ஆகியவை காந்தியடிகள் காட்டும் அகிம்சை நெறிகளாகக் கொள்ளலாம்.

காந்தியம், அகிம்சை, சத்தியாகிரகம் வழி உண்மையையும் சுதந்திரத்தையும் அடைய போதனை செய்தது. சமணம், பௌத்த மதங்களின் அகிம்சை, பக்தியியக்க அனுபூதியாளர்களின் சத்தியவேட்கை ஆகியன காந்தியடிகளிடத்து அகிம்சை, சத்தியாகிரகமாகப் பரிணமித்தது. ஆங்கிலேயரை எதிர்க்க; விடுதலை பெற இவைகள் நெறிகளாயின.

**திருவள்ளுவர் காவியத்தில் அகிம்சை :**

திருவள்ளுவர் காவியத்தில், பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தல் என்ற நிலையில், கொல்லாமை வலியுறுத்தப்படுகின்றது. பிறர் நமக்குத் தீங்கு செய்தாலும், நாம் ஊறு செய்யாமல் நல்வழிப்படுத்தல் என்ற நிலையில், காவியத்தில் அமைக்கப்பட்ட, சமதருமச் சமுதாயத்தில், வேம்புநாட்டில் படைக்கலப் பயிற்சி பெற்றிருந்தும், போர் புரியும் உடல்வலிமை, மனவலிமை பெற்றிருந்தும், வலிய போருக்கு வருவோருடன் அவர்கள் தங்கள் வலிமையைக் காட்ட எதிர்த்துப் போர் புரியவில்லை. அகிம்சைமுறையில், போருக்கு வந்தவர்களை நல்வழிப்படுத்துகின்றனர்.

**கொல்லாமை :**

திருவள்ளுவர் காவியத்தில், உலக ஞானம் பெற, வள்ளுவனார் யாத்திரை செல்லும்போது, காசியில் ஆரியர் செய்யும் வேள்வித்தீயில் ஆக்கள் கொல்லப்படுதலைக் காண்கிறார். அந்தக் கொலை வேள்வியைத் தடுத்து நிறுத்திக் கொல்லாமையையும், வேள்வியையும் பற்றி ஆரியர்க்கு உணர்த்தும் இடங்களிலும், உரோம் நகரில் வள்ளுவனார் புலால் உண்ண

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

மறுத்துரைக்கும் இடங்களிலும் வேலன் வெறியாடல் தடுத்த இடங்களிலும் கொல்லாமை பற்றிய ஆசிரியர் சுருத்துக்களை அறியமுடிகின்றது.

வெறியாடல் என்பதற்குத் தம்முயிர்க் காக்கப் பிற உயிரைப் பலியிடல் என்று விளக்கம் கூறும் ஆசிரியர் (தி.கா.4;14;2) வேள்வி, வெறியாடல் இரண்டும் ஒன்றே என்கிறார் (தி.கா.4;14;11).

திருவள்ளுவர் காவிய ஆசிரியர் வேள்வி, வெறியாடல் பற்றிப் பின்வருமாறு விளக்கம் கூறுகிறார்: பயன்தரும் இனத்தைக் கொன்று வேள்வி செய்தால் தெய்வம் உறையும் விண்ணுலகை அடையலாம் என்ற நம்பிக்கையும், இந்த உலகில் வேண்டும்பல போகங்களை வேண்டியவாறு அடையவேண்டும் என்ற அவாவும் இங்கு செய்யும் வேள்விக்கான காரணங்கள் (தி.கா.4;14;12) சேவல், வெள்ளாடு ஆகியவற்றைக் கொன்று பூசை செய்தல் வெறியாட்டமாகும். மாந்தருயிர்க்கு உறும் தீங்குபோக்கும் சாந்தி என இதனைக் கூறுவர் (தி.கா.4:14;13). விண்ணவருக்காக வேள்வி செய்தல்போல, முருகனை மனதில்கொண்டு வெறியாடல் செய்யப்படுகின்றது (தி.கா.4;14;14). கள்ளுடன் ஊன் உணவைக் களித்துண்ண வேள்வி, வெறியாடல் என்பனவற்றை மேற்கொண்டனர். செய்த தீங்கினை மறக்கத் தெய்வத்தின் பெயரைச் சாற்றினர் (தி.கா.4;14;15).

**"தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூ னுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்"** (தி.கா.2;10;22)

என்றும்,

**"அவிசொரிந்தா யிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர் செகுத்துண்ணாமை நன்று"** (தி.கா.2;10;27)

என்றும்,

**"நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்**
**நோய்செய்யார் நோயின்மை வேண்டுபவர்"** (தி.கா.2;10;35)

என்றும் குறள்வழி, கொல்லாமையை; புலால் உண்ணாமையை ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

**இனியவே செய்தல் :**

பகைவரும் மனம் மாறும்படியாக, இன்னா செய்தாருக்கும் இனியவையே செய்து எதிர்த்துப் போரிடாமல் உயிரையீதலும் அறம் என்னும் அகிம்சை வழியினைத் திருவள்ளுவர் காவிய ஆசிரியர் ஆதரித்தார் என்பதைப் பின்வரும் காவியப் பகுதியால் அறியமுடிகின்றது.

கொலைப் போரைப் போக்கிட, அகிம்சை அடிப்படையில் அறப்போர் புரியவேண்டும் என்கிறார் ஆசிரியர். "மிருகத்தனத்தை மிருகத்தனத்தால் ஒருவர் எதிர்ப்பது தம்மிடம் ஒழுக்கமும், அறிவும் இல்லை என்று ஒப்புக் கொள்வதாகும். இவ்வாறு செய்வதால் ஒரு விஷமச் சக்கரம்தான் தொடங்கும்" (ஸ்ரீ.யு.எஸ். மோ உறன்ராவ்; ப.59) என்ற காந்தியடிகளில் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

இக்காவியத்தில் படைக்கப்பட்டுள்ள வள்ளுவனார் வழியினர், சமதரும வாழ்விற்காக ஒருநாடு அமைக்க வேண்டுமென, வேம்பு மரங்கள் நிறைந்துள்ள அமைதியூர்ப்பக்கம் காட்டைத் திருத்தி, வேம்பு மரங்களால் வீடுகள் கட்டி, ஊர்கள் அமைத்துத் தத்தம் தேவைக்களவு நிலங்களைப் பண்படுத்திச் சமதரும வாழ்வு வாழ்ந்தனர் 'தன்னாட்டிலிருந்தும், தன்னை ஒருபொருட்டாக மதியாமல் மன் மரபை அழிக்கும் பொதுவுடைமை ஆட்சியை வேம்புநாட்டார் ஆள்கின்றனராம் எனப் பாண்டியன் இறுமாந்து சோழ மன்னனின் தூண்டுதலால் மேலும் சினம்கொண்டு, வேம்புநாட்டை அடிமைப்படுத்த; அழிக்கப் படைகளை அனுப்பினான்.

படைகள் வேம்புநாட்டிற்குச் சென்று, போரென்ற எண்ணமேயின்றி வழக்கம்போல் தத்தம் பனிகளைச் செய்துகொண்டிருக்கும் சமதரும வாழ்வு மக்களைத் தாக்கத் தொடங்கின. நான் ஒருவனைக் கொன்றால், என்னை ஒருவன் கொல்வான், அவன் பிறிதொருவனால் சாவான். இவ்வாறு இருபக்கமும் இறப்புநேரும்' (தி.கா.5;15;28) என்று தெளிந்தச் சமதரும வாழ்வு மக்கள் எதிரிக்கு உயிர் ஈயும் அகிம்சை நெறியை விரும்பினர். கொலை செய்து சாதலைவிடக் கொல்லாது சாதல் அமைதிக்கு வழி வகுக்கும் என எண்ணினர் (தி.கா.5:15:29). போரினை ஒழிக்கக் காந்தியின் அகிம்சை நெறியினை உளத்தில் கொண்டனர். படைகள் தாக்கிய

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

போதிலும், 'பேடிகள்' என இகழ்ந்தபோதிலும் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளவில்லை (தி.கா .5;15;36).

’எதிர்த்தாலும், எதிர்க்காவிட்டாலும், தென்னவனின் செஞ்சோற்றுக் கடன்தீர்க்கப் படைவீரர், வேம்புநாட்டை அடித்துத் துன்புறுத்திக் கொன்றனர். எதிர்ப்பின்றிச் சாகஉயிர் ஈவாரைக் கண்டு மனம் குழைந்தனர்’ (தி.கா.5;16;1). சுரண்டுதல், சுரண்டப்படுதல் இரண்டும் இல்லாத வேம்புநாட்டு மக்கட்கு இரங்காமல், அவ்விரண்டும் உடைய மன்னர், செல்வர் பொருட்டுப் போரில் வேம்புநாட்டாரைக் கொல்லல் மனிதப்பண்பன்று என உணர்ந்தனர் . மேலும் ’மன்னரும், செல்வரும் போரில் மாள்வதில்லை, நாம் எதற்காக மாளவேண்டும் இவர்கள் நமக்குப் பகைவரும் அல்லர், நம்மை எதிர்ப்பவருமல்லர்’ எனப் படைவீரர் தெளிந்தனர் (தி.கா.5;16;9).

அன்றியும், அகிம்சைப் படையினர், பாண்டியன் படையினர் நம்மை அடித்துத் துன்புறுத்தியபோதும், இழித்துப் பேசியபோதும், வன்சொற்கள் சொல்லவில்லை.

**"தன்றுயிர் நீப்பினும் செய்யற்க; தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை"** என்றுரைத்தனர் (தி.கா.5;16;9)
தங்கள் உடம்பில் நையப்புடைக்கும் போதும் அவர்கள்,
**"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்"** என்றனர் (தி.கா.5;16;10)

வாளால், கதையால், மழுவால் கணைவேலால் வதைத்தபோதிலும் வாழ்த்தினர் (தி.கா.5;16;11). இவ்வாறு அகிம்சை நெறியினர் அடிபடுதலையும், அடித்தவரை வாழ்த்துதலையும் கண்ட படைகள், அகிம்சைப்பால் பருகி, உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டனர் . கைப்படைகளை வீசி எறிந்தனர் (தி.கா.5;16;13). போரில் அடிபட்டோர், அடித்தவர்க்கு விருந்தோம்புதலைக் கண்ட தென்னவனும், மனம்மாறி அகிம்சை வழியினர் ஆயினன் என்னும் வகையில்

 Copyright (c) 2025 Author : Available online: https://tamilmanam.in/journal/

இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் சால்பினைக் காவிய ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**தொகுப்புரை :**

- திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட முதற்காப்பியம் திருவள்ளுவர் காவியமாகும்.
- பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாமை, பிறவுயிர் தீங்கு செய்தாலும் தீங்கு செய்யாமை, பிறவுயிர் தீங்கு செய்தாலும் அதற்குத் தீங்கு செய்யாமல் தீமையை உணர்த்தல் என்னும் மூன்று நிலைகளில் திருவள்ளுவர் காவியத்தில் காந்தியடிகளின் அகிம்சைநெறி சுட்டப்படுகிறது.
- இக்காவியத்தில் பிறர்வுயிர்குத் தீங்கு செய்யாமை என்னும் நிலையில் கொல்லாமை வலியுறுத்தப்படுகிறது.
- பிறர் தீங்கு செய்தாலும் அவர்க்குத் தீங்கு செய்யாமல் நல்வழிப்படுத்தல் என்ற நிலையில் தங்கள்மீது படையெடுத்துவந்த பாண்டியன் படைகளைச் சமதருமவழியினர் எதிர்த்துப் போராடாமல், அகிம்சை நெறியில் அவர்களை நல்வழிப்படுத்தியதாக இக்காவியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- என்பன இக்கட்டுரையால் அறியலாகும் முடிவுகளாகும்.

**துணைநின்ற நூல்கள்:**


- நாயுடு. அ.கி., - திருவள்ளுவர் காவியம், ஆர்.என்.பிரஸ், கோயம்புத்தூர். 1958
- திரிகூடசுந்தரம் – பாபுஜி காட்டும் பாதை, திருபாபுஜி பதிப்பகம், சென்னை 1966
- மோஉறன்ராவ். ஸ்ரீ.யு.எஸ்., (தொ.ஆ.) - மகாத்மா காந்தி போதனைகள், பப்ளிகேஷன் டிவிஷன்,தகவல் ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய சர்க்கார். 1970


**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.